Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, APRIL 20, 2022

புதன்கிழமை ஏப்ரல் 20, 2022 | ஒளி: 07 கதிர் 284 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free



துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி; 24 பேர் படுகாயம்

# ரம்புக்கனையில் பெரும் களேபரம்

ரம்புக்கனை நகரில் நேற்று (19) மாலை இடம்பெற்ற களேபரத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார் என, கேகாலை வைத்தியசாலையில் பணிப்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார். சம்பவத்தில் காயமடைந்த 24 போராட்டக்காரர்களில் பலர் துப்பாக்கிச் சூட்டுக்கு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்ப ட்டுள்ளதாகவும் அதில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் கேகாலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எரிபொருள் நெருக்கடி மற்றும் எரிபொருள்

தொடர்ச்சி P2

# விலைகள் எகிறின

## பஸ் கட்டணம் 35% ஆல் உயர்வு



நேற்று (19) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணத்தை 35 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பாண் விலை ரூ.30 ஆல் உயர்வு

ஒரு இறாத்தல் பாணின் விலையை நேற்று (19) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 30 ரூபாயினால் அதிகரிப்பதற்கு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

தொடர்ச்சி P2



## ரூ.40 ஆல் அதிகரித்தது கோதுமை மா விலை

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை நேற்று (19) முதல் 40 ரூபாயினால் அதிகரிப்பதாக

தொடர்ச்சி P2



தொடர்ச்சி P2

## உணவுப் பொதிகளின் விலைகளும் எகிறின

எரிபொருட்களின் விலை உயர்வை கருத்திற்கொண்டு சோற்றுப் பொதி,



## விண்ணைத் தொட்டது எரிபொருள் விலை

முழுச் செய்தி P2





பொறுமையை இழந்த மக்கள்

# பொங்கி எழுந்தனர்

## டயர்களை எரித்து எதிர்ப்பு

- பாரிய வாகனங்களும் குறுக்காக நின்றன
- தண்டவாளங்களை குறுக்காக போட்டனர்
- பெரல்கள், மரக்கட்டளைகளை வீதிக்கு இறக்கினர்
- ரம்புக்கனையில் கண்ணீர்புகை பிரயோகம் பலர் பாதிப்பு

விலை அதிகரிக்கும் போதெல்லாம் பொறுமை காத்திருந்த மக்கள், பொறுமையை இழந்து, நேற்றுக்காலை முதல் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். நாட்டின் பலபாகங்களிலும் ஒரே தடவையில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் குதித்தமையால், பல மாவட்டங்கள் ஸ்தம்பிதமடைந்தன.

பிரதான வீதிகளை மட்டுமன்றி ரயில் தண்டவாளங்களையும் மறித்து, தண்டவாள இரும்புகளை குறுக்காக தூக்கிப்போட்டு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். அத்துடன், டயர்களையும் போட்டு எரித்தனர். இதனால், ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## சபையில் ஒலித்தவை



முழுச் செய்தி P3

## முழு ஆதரவு வழங்க ஐ.எம்.எ:.ப் தயார்



### நிர்மலா சீதாராமனும் இலங்கைக்காக பரிந்துரை

பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்காக இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) உறுதியளித்துள்ளதாக நிதி அமைச்சு

தொடர்ச்சி P2

## சஹ்ரானின் வாகனம் சபைக்குள் வந்தது





### தட்டிக்கேட்டார் ஹரின்: மறுத்தார் வீரசேகர

முழுச் செய்தி P2

## "கோட்டா கோ ஹோம" சபைக்குள்ளும் வந்தது

பா.நிரோஸ்

பாராளுமன்றம் நேற்று (09) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

தொடர்ச்சி P2

தமிழருக்கு எதிரான

## ஒடுக்குமுறைகள் தொடர்கின்றன



பா.நிரோஸ்

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாடு இந்தளவுக்கு பாதிப்புக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையிலும், இந்த அரசாங்கம் தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறைகளை கைவிடவில்லை என்று தமிழ் மக்கள் தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மருந்து தட்டுப்பாட்டால் எவரும் மரணிக்கவில்லை



நாட்டில் மருந்து தட்டுப்பாடு காரணமாக இதுவரை 50 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக எதிர்க்கட்சியினர் சபையில் குற்றம் சுமத்திய வேளையில்இ நாட்டில் மருந்து தட்டுப்பாடு காரணமாக எந்த ஒரு நபரும் இதுவரை மரணிக்கவில்லை சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.நாட்டில் மூன்று மாதங்களுக்கு மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவலாம். எனினும் அந்த தட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## ஒரு தலைக்கு 2 மில்லியன் டொலர்



பா.நிரோஸ்

மக்களின் உயிர்களை காக்க மருந்துக்கொள்வனவுக்கு டொலர் வழங்க மறுக்கும் இந்த அரசாங்கம் இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு 2 மில்லியன் டொலரை வழங்கி உறுப்பினர்களை விலைக்கு

தொடர்ச்சி P2

## எதிர்க்கட்சியிலும் சுயாதீன குழுவாம்

### சபையில் பிரதான எதிர்க்கட்சிகள் வாக்குவாதம்



பா.நிரோஸ்

அரசாங்கத்தில் இருந்து விலகிய 40 சுயாதீன எம்.பி.க்களுக்கும் எதிர்க்கட்சி பக்க ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தபோதும் தாம் உள்ளிட்ட 40 பேர் எதிர்க்கட்சித் தலைவரின் குழுவல்ல எனவும் எதிர்க்கட்சியிலும் சுயேட்சைக் குழுவாகவே செயற்படுவோம் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியி தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# விலைகள் எகிறின

## பாண் விலை ரூ.30 ஆல் உயர்வு

அதற்கமைய 110 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட ஒரு இறாத்தல் பாணின் விலை 140 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளது. அத்துடன், ஏனைய அனைத்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளையும் குறைந்தது 10 ரூபாயால் அதிகரிக்க வேண்டும் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

## பஸ் கட்டணம் 35% ஆல் உயர்வு

20 ரூபாயாக இருந்த குறைந்தபட்ச பஸ் கட்டணம் 27 ரூபாயாக அதிகரிக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார். கட்டண அதிகரிப்பு தொடர்பில் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி ஆகிய இரண்டும் இந்த வாரம் எரிபொருள் விலையை அதிகரிக்க தீர்மானித்ததை அடுத்து இந்த விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## விண்ணைத் தொட்டது எரிபொருள் விலை

75 ரூபாய் அதிகரித்து 329 ரூபாயாகவும், ஒரு லீற்றர் ஒட்டோ டீசல் 113 ரூபாயால் அதிகரித்து 289 ரூபாயாகவும் காணப்பட்டது.

இதேவேளை, இந்திய எண்ணெய் நிறுவனம் (ஐ.ஓ.சி) ஞாயிற்றுக்கிழமை (17) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் எரிபொருள் விலைகளை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரூ.40 ஆல் அதிகரித்தது கோதுமை மா விலை

பிறீமா நிறுவனம் நாட்டிலுள்ள அனைத்து விநியோகஸ்தர்களுக்கும் அறிவித்துள்ளது. இந்த விலை அதிகரிப்புடன் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் அதிகபட்ச சில்லறை விலை 240 ரூபாயில் இருந்து 250 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## உணவுப் பொதிகளின் விலைகளும் எகிறின

பிறைட்ரைஸ், கொத்துரொட்டி உள்ளிட்ட உணவக உணவுப் பொருட்களின் விலையை 20 சதவீதத்தால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், நேற்று (19) தெரிவித்தார்.

# முழு ஆதரவு வழங்க ஐ.எம்.எஃப் தயார்

தெரிவித்துள்ளது. அதேபோல் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் இலங்கைக்காக ஐ.எம்.எஃப்பிடம் பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவாவுடன் நிதியமைச்சர் அலி சப்ரி, நேற்றுமுன்தினம் (18) பேச்சுவார்த்தை நடத்தியிருந்த நிலையில் இலங்கையின் நிதி நெருக்கடியைத் தணிப்பதற்கு நிதியமைச்சர் ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியதாக நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள ஆதரவை வலுப்படுத்துவதற்கான செயல்முறையை விரைவுபடுத்துவதற்கு சாதகமாக பதிலளித்தார் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வொஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில், திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

அதேபோல் ஐ.எம். எஃப் தலைமையகத்தில் இந்திய நிதி அமைச்சர் மற்றும் உயர்மட்ட இந்திய பொருளாதாரக் குழுவையும் இலங்கை பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியிருந்த நிலையில் இலங்கையின் நெருக்கடி நிலைமைகளை தாம் அறிந்து கொண்டுள்ளதாகவும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை இலங்கைக்கு வழங்க வேண்டும் எனவும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் இலங்கைக்காக சர்வதேச நாணய நிதியத்திடம் பரிந்துரைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சஹ்ரானின் வாகனம் சபைக்குள் வந்தது

கடந்த 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சந்தேக நபராக கருதப்படும் சஹ்ரான் ஹசிம் பயன்படுத்திய வாகனத்தை முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எவ்வாறு பயன்படுத்த முடியும்? இது குறித்து உடனடியாக விசாரணைகளை நடத்த வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ஹரின் பெர்னாண்டோ சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பியே இவ்வாறு வலியுறுத்திய ஹரின் பெர்னாண்டோ எம்.பி. மேலும் கூறுகையில்,

இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத் தாக்குதலின் பிரதான சந்தேக நபராக கருதப்படும் சஹ்ரான் ஹசிம் பயன்படுத்திய வாகனத்தை தற்போது முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பயன்படுத்தி வருவதாக சர்வதேச செய்தி சேவை ஒன்றின் கொழும்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவு ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

## "கோட்டா கோ ஹோம" சபைக்குள்ளும் வந்தது

இதன்போதே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள், தலையிலும் கைகளிலும் 'கோட்டா கோ ஹோம்' என பொறிக்கப்பட்ட துண்டுகளைக் கட்டியவாறு சபைக்கு வந்திருந்ததுடன் சபைக்குள் 'கோட்டா கோ ஹோம்' எனக்கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (19) அமர்வின்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர், கோட்டா கோ ஹோம் என்கிற வாசகங்கள் எழுதப்பட்டிருந்த பட்டிகளை அணிந்து சபை அமர்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## மருந்து தட்டுப்பாட்டால் எவரும் மரணிக்கவில்லை

பாராளுமன்றத்தில் நேற்று (19) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன மேலும் கூறுகையில்,

நாட்டில் மருந்து தட்டுப்பாடு நிலவுகின்ற போதும் எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் அந்தக் கட்டுப்பாட்டை நீக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளனது.

உலக வங்கி, உலக சுகாதார நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் உதவி ஒத்துழைப்புடன் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எம்மிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ள பட்டியலின் அடிப்படையில் மூன்று வார காலத்தில் முக்கிய மருந்துகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உலக சுகாதார நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது என்றார்.

## ஒடுக்குமுறைகள் தொடர்கின்றன

பாராளுமன்றத்தில் நேற்று (19) நடைபெற்ற மருத்துவ கட்டளை சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாங்கள் கடந்த ஒன்றரை வருடங்களாக வட மாகாணத்தின் சுகாதார நிலைமை தொடர்பில் சுட்டிக்காட்டி வருகின்றோம். அதில் யாழ். வைத்தியசாலையில் நிலவும் பற்றாக்குறைகள் தொடர்பிலும் கூறியுள்ளோம். அங்கு நரம்பியல் சத்திரச் சிகிச்சை செய்ய வேண்டியவர்கள் பலர் இருக்கின்றனர். தாமதம் காரணமாக அங்கு நோயாளர்கள் பாதிக்கப்படும் நிலைமை உள்ளனர். இதேவேளை வடக்கில் 2,000 வரையிலான தாதியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. தயவு செய்து இது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்கின்றோம்.

இதேவேளை எமது தேசத்திற்காக உண்ணாவிரதம் இருந்த தாய் அன்னை பூபதியின் நினைவுநாள் இன்றாகும். மட்டக்களப்பில் உள்ள அவரின் கல்லறையில் அவரின் பிள்ளைகள் அஞ்சலி செலுத்த முடியாதளவுக்கு காவல்துறை நீதிமன்றத்தை தவறாக வழிநடத்தி தடையுத்தரவை பெற்றுள்ளது.

உங்களின் ஆளுமையற்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாடு பாதிப்புக்குள் தள்ளப்பட்டுள்ளது என்றார்.

## ரம்புக்கனையில் பெரும் களேபரம்

விலையேற்றத்துக்கு தீர்வைக் கோரி, ரம்புக்கனை நகரில் வீதிகள் மற்றும் ரயில் தண்டவாளத்தை மறித்து பிரதேச வாசிகளால் போராட்டம் நடத்தப்பட்டது. நேற்று (19) அதிகாலை 1.30 மணி முதல் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் கண்டி - கொழும்பு ரயில் மார்க்கம் மறிக்கப்பட்டதுடன், ரம்புக்கனை - கேகாலை, குருநாகல் மற்றும் மாவனெல்ல வீதிகளை மூடி பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

15 மணி நேரமாக போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்களைக் கலைக்க மாலை வேளையில் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், அங்கு துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், துப்பாக்கிப் பிரயோகம் குறித்து கருத்து வெளியிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், ரம்புக்கன ரயில் கடவைக்கு இடையூறு விளைவித்த ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கே பொலிஸாரால் சில தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார். மேலும், ரயில் கடவைக்குக் குறுக்கே நிறுத்தப்பட்டிருந்த எரிபொருள் பவுசருக்கு தீ வைப்பதற்கு போராட்டக்காரர்கள் முயன்றபோதே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு, உடன் அமலுக்கு வரும்வகையில் மறுஅறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

# பொங்கி எழுந்தனர்

எவ்விதமான முன்னறிவிப்புகளும் இன்றி, முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களால், அதிகாலைவேளையில் எழுந்து பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் உட்பட ஆசிரியர்களும் நிர்வாகத்தினரும், வேலைகளுக்குச் சென்றவர்களும் வீடுகளுக்குத் திரும்ப முடியாமல் திணறினர்.

எனினும், பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள், மிகப்பாதுகாப்பான முறையில் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். எனினும், வேலைகளுக்குச் சென்றவர்கள் பயணித்த பஸ்கள் இடைமறிக்கப்பட்டு, பணியாளர்கள் நடுவீதியிலேயே இறக்கிவிடப்பட்டனர்.

தூர இடங்களிலிருந்து புறப்பட்ட பொதுப் போக்குவரத்து பஸ்களும் இடைநடுவிலேயே திருப்பியனுப்பப்பட்டன. முக்கிய தேவைகளுக்காக புறப்பட்டவர்கள் வெறுங்கையுடன் வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர். நேற்றுக்காலையில் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் நேற்று இரவு வரையிலும் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், ரம்புக்கனையில் ரயில் தண்டவாளங்களை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை கலைக்கும் வகையில், நேற்றுமாலை 6 மணியளவில் பொலிஸ் கண்ணீர்புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதில் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எரிபொருள் விலைகளை நேற்று முன்தினம் (18) நள்ளிரவு முதல் அதிகரித்து. அந்த, விலை அதிகரிப்பைக் கண்டித்தே பெரும்பாலான இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அநுராதபுரம், மாத்தறை, காக்காபள்ளிய, கட்டுநாயக்க, ரம்புக்கனை, காலி, கேகாலை, ஹிங்குராங்கொட, பத்தேகம, திகன, காலி, கம்பளை, கண்டி, மத்துகம, அவிசாவளை ஆகிய பிரதேசங்களில் வீதிகள் மறிக்கப்பட்டு போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்திருந்தது. பல பிரதேசங்களில் வீதிகளில் டயர்கள் கொளுத்தப்பட்டு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனினும், மாவனெல்லையில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் டயர்கள் எரிக்கப்பட்டதையடுத்து, அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலைமை நேற்றிரவு வரையிலும் நீடித்தமையால், பாடசாலைகள் மற்றும் கடமைகளுக்கு இன்று (20) செல்வதை பலரும் தவிர்த்துகொண்டனர் என அறியமுடிகின்றது.

## ஒரு தலைக்கு 2 மில்லியன் டொலர்

வாங்கியுள்ளது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. நளின் பண்டார சபையில் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) செவ்வாய்க்கிழமை ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய போதே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

பொதுமக்களுக்கு மருந்துகள் இல்லை .மருந்துகள் கொள்வனவு செய்ய அரசாங்கம் டொலர்களை வழங்காது மக்களை கொன்று வருகின்றது. இந்த கொலைகார அரசாங்கம் தனது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள புதிய அமைச்சரவையயும் 24 இராஜாங்க அமைச்சர்களையும் நியமித்துள்ளது. இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்களில் சிலரை ஒருவருக்கு 2 மில்லியன் டொலர்களை இலஞ்சமாக வழங்கியே விலைக்கு வாங்கியுள்ளது.

விமல் வீரவன்ச எம்.பி.யும் தனது கட்சி எம்.பி.க்களை விலைக்கு வாங்க அரசாங்கம் முயற்சித்ததாகவும் வீடுகளுக்கு வந்து விலை பேசியதாகவும் ஆனால் தமது எம்.பி. க்கள் விலை போகவில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார். எனவே தேவைப்பட்டால் அவ்வாறு 2 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர்களின் பெயர் விபரங்களை வெளியிடத்தயார் என்றார்.

# எதிர்க்கட்சியிலும் சுயாதீன குழுவாம்

மைத்திரிபால சிறிசேன சபையில் அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று (19) செவ்வாய்க்கிழமை காலை கூடியபோது, அரச தரப்பில் சுயாதீனமாக அறிவித்த 42 எம்.பிக்களில் இருவர் பல்டி அடித்த நிலையில் ஏனைய 40 எம்.பிக்களும் தமக்கு எதிர்க்கட்சி பக்கத்தில் ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென சபாநாயகரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய அவர்களுக்கு எதிர்க்கட்சி பக்கத்தில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே இன்னொரு முற்போக்கு சிந்தனையுள்ள குழுவினரும் எதிர்க்கட்சியினருடன் இணைந்திருப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்த நிலையிலேயே தாம் உள்ளிட்ட 40 பேர் எதிர்க்கட்சித் தலைவரின் குழுவல்ல என்றும் எதிர்க்கட்சியில் சுயேட்சைக் குழுவாகச் செயற்படுவதாகவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் எம்.பியுமான மைத்திரி பால சிறி சேன தெரிவித்தார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ் Mirror www.tamilmirror.lk
பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+ TAX
Mobitel Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX

# தீர்வு எட்டப்படாமை கவலையளிக்கிறது

பாராளுமன்றத்தின் அதிகாரத்தை பலப்படுத்துவதற்காக 21ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு பாராளுமன்றத்தினால் இதுவரையில் சாதகமான தீர்வு எட்டப்படாமை கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தின் நேற்றைய (19) அமர்வை ஆரம்பித்து வைத்து தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டில் தற்பொழுது நிலவும் நெருக்கடியான நிலைக்கு பாராளுமன்றத்தின் ஊடாக குறுகியகால மற்றும் நீண்டகால தீர்வுகளை வழங்கும் நோக்கில் இம்மாதம் 05, 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பாராளுமன்ற விவாதங்களில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அவை தொடர்பில் ஒரு சாதகமான தீர்வை எட்ட முடியாமல் போனமை தனக்குக் கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின்போது, பொதுமக்கள் மத்தியில் காணப்படும் அமைதியின்மைக்கு நீண்ட கால தீர்வாக புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கும், குறுகியகால மற்றும் துரிதமாக எடுக்கப்படவேண்டிய தீர்வுகளாக கடந்த காலங்களில் பின்னடைந்திருந்த பாராளுமன்றத்தின் அதிகாரத்தை பலப்படுத்துதல் என்ற காலத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டு, அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தின் ஊடாக முறையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என கட்சித் தலைவர்கள் பலர் கருத்துத் தெரிவித்திருந்ததாகவும் கூறினார்.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை கணக்காய்வாளர் நாயகத்தின் மேற்பார்வைக்கு உட்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பு மற்றும் சட்டத்தைத் திருத்தல், அரசியல் கட்சிகளைக் கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்கு ஏற்ற வகையில் திருத்தங்களை மேற்கொள்ளல், அரசாங்கத்தின் ஒப்பந்தங்களுக்கு கேள்விப்பத்திரங்கள் இன்றி பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதைத் தடுத்தல் மற்றும் அரசாங்க ஒப்பந்தங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான திருத்தம், அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் அல்லது அரசாங்க ஊழியர்களினால் சட்டவிரோதமாகச் சம்பாதித்த வெளிநாட்டு வங்கி அல்லது நிதி நிறுவனங்களில் வைப்பிலிடப்பட்டிருப்பதாக வெளியாகும் சொத்துக்களை அரசுடைமையாக்குவது ஏதுவான வகையில் சட்டங்களைத் திருத்தல், இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்துக்கு மற்றும் ஜனாதிபதிப் பதவிக்கு நியமிக்கப்படுவதை தடுக்கும் திருத்தம் போன்ற பல்வேறு முன்மொழிவுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

அதற்கமைய நாட்டில் தற்பொழுது நிலவும் நெருக்கடி நிலைமையை கட்டுப்படுத்தும் முயற்சியாக பொதுமக்கள் எதிர்பார்க்கும் நலன்களுக்காக முன்னுரிமை வழங்கும் வெளிப்படைத்தன்மை கொண்ட, ஊழலற்ற செயல்திறன்மிக்க ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# “19ஐ கொண்டுவந்து நெருக்கடியை தீர்ப்போம்”

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு அரசியலமைப்பு ரீதியாகவே தீர்வுகாண வேண்டுமென தெரிவிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முதற்கட்டமாக 19ஆவது திருத்தச் சட்டத்தை மீள அமல்படுத்தப்போவதாகவும் அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (19) அமர்வில் கலந்துகொண்டு விசேட அறிவிப்பை விடுக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



முதற்கட்டமாக அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தை மீண்டும் அமல்படுத்துவதே சரியான தீர்வு. ஜனாதிபதியின் ஒத்துழைப்புடன் விரிவான புதிய அரசியலமைப்பு திருத்தத்தை நோக்கி நகர வேண்டும். அதற்கான எமது முயற்சிக்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள சவால்கள் தொடர்பில் இந்தச் சபையின் உறுப்பினர்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளனர். நமது நாட்டின் வரலாற்றில் நீண்ட காலமாக எதிர்கொண்ட பொருளாதார சவால் தற்போது மிகவும் கடினமான கட்டத்தை எட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எந்தவோர் அரசாங்கமும் தன் மக்களுக்கு ஒருபோதும் மனமுவந்து கஷ்டங்களை ஏற்படுத்தாது. ஆனால் இந்நாட்டு மக்கள் இன்று பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிவாயு நெருக்கடி ஆகியவை நம் கண்களுக்கு புலப்படும் சிரமங்களாகும். இதன் காரணமாக இன்று மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதை நான் அறிவேன் என்றார்.

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் எமது பொறுப்புகளில் இருந்து விடுபட முடியாது, இந்த நெருக்கடியை போக்குவதற்கான திட்டங்களை ஒவ்வொன்றாக முன்வைக்க வேண்டும். எனவே பாரபட்சமின்றி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் கைகோர்க்குமாறு எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுப்பதாகவும் கூறினார்.

மேலும், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்களுடன் ஏற்கெனவே கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். அவர்களிடம் இருந்து நல்ல பதில் கிடைத்து வருகிறது. இந்தப் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு தேவையான ஆதரவை எங்கள் நட்பு நாடுகள் எமக்கு வழங்கி வருகின்றன.

கலந்துரையாடல்கள் ஊடாகவே நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டும். முன்னதாக காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுக்களை கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தேன். அவர்களின் பெறுமதியான யோசனைகளை எடுத்து தேவையான தலையீடுகளை செய்ய தயார் எனவும் கூறினார்.

எதிர்வரும் சில வாரங்களில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற சந்தேகம் தேவையில்லை.

அன்றாட வாழ்வில் மணிக்கணக்கில் வரிசையில் காத்திருக்க வேண்டிய வலியை அறிந்து, இந்த நிலையைத் தவிர்க்க வேண்டியதன் அவசியத்தை ஒப்புக் கொள்கிறோம். 24 மணி நேரத்திற்குள் தீர்வு கிடைக்காவிட்டாலும், உங்களை இனிமேலும் நாங்கள் வரிசையில் காத்திருக்க வைக்க மாட்டோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் நமது நாட்டின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையும் மிக முக்கியமானது. இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவான மற்றும் நடைமுறை சாத்தியமான தீர்வாக அரசியலமைப்புத் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றார்.

இதன் முதற்கட்டமாக அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தை மீண்டும் அமல்படுத்துவதே சரியான தீர்வு. ஜனாதிபதியின் ஒத்துழைப்புடன் விரிவான புதிய அரசியலமைப்பு திருத்தத்தை நோக்கி நகர வேண்டும். அதற்கான எமது முயற்சிக்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# “ராஜபக்ஷ கூண்டோடு விலக வேண்டும்”

தற்போதைய பிரதமர் உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கமும் பதவியிலிருந்து விலக வேண்டும் எனத் தெரிவிக்கும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதால் மாத்திரமே நாட்டில் ஸ்திரத்தன்மையை உருவாக்க முடியும் எனவும் தெரிவித்தார்.



தற்போது நாடு முகங்கொடுக்கும் நெருக்கடி நிலைமை வருமென நாம் முன்கூட்டியே எச்சரித்திருந்தோம். எனினும் இரட்டைக் குடியுரிமைக் கொண்டகாகம், நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் போலியான மாயை ஒன்றையே உருவாக்கியது. இளையவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கிவிட்டு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளனர். செய்த பாவங்களுக்கே இவ்வாறு நடக்கிறது.

இந்த இரட்டை குடியுரிமை கொண்ட பிரஜையை, பாராளுமன்றத்துக்கு அழைத்துவரும்போதே நாம் கூறினோம். இப்போது இவரால் வீதியில் நடக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய நிலைக்கு பொறுப்புக்கூறுவதிலிருந்து அரசாங்கத்தால் விலக முடியாது எனவும் தெரிவித்தார்.

மார்ச் முதலாம் திகதி என்னையும் கம்மன்பிலவையும் அமைச்சுப் பதவிகளில் இருந்து விரட்டினீர்கள். இந்த ஒரு மாதத்தில் எங்களை விரட்டிய காகமும் இல்லை; அரசாங்கமும் அநாதரவாகியுள்ளது. இப்போதாவது யதார்தத்தை புரிந்து, அரசாங்கம் நடந்துக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் எதிர்காலத்தில் ஏற்படும் விபரீதங்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் எனவும் கூறினார்.

# வரிசைகளுக்கு எப்போது முடிவு கட்டுவீர்கள்?

அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசைகளுக்கு எப்போது முடிவுகட்டுவீர்கள் எனப் போராட்டக்காரர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே பிரதமர் இதற்குப் பதிலளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு சில்லறைத்தனமான தீர்வுகள் வேண்டாமெனவும் தெரிவித்தார்.



நாட்டின் தற்போதைய நிலைக்கு பி.பி.ஜயசுந்தர, ஆர்ட்டிக்கல, கப்ரால் ஆகியோரே காரணமென அரசாங்கம் குற்றம் சுமத்துகிறது. எனினும் தற்போது பதில் சொல்லுவதற்கு எவரும் இல்லை. முதுகெலும்பும் இல்லை. அத்தியாவசிய மருந்துகள், எரிபொருள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்காக வைத்திருந்த பணத்தை கடன் வட்டியை செலுத்துவதற்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்றார்.

கடந்த காலங்களில் இருந்து அரசாங்கம் இதுவரையில் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. அரசாங்கத்துக்கு கிடைத்துவந்த வருமானத்தை தற்போதைய அரசாங்கம் குறைத்தமையாலேயே அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடும், வரிசைகளும் நாட்டில் ஏற்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தே ஆக வேண்டும். நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு சில்லறைத்தனமான தீர்வுகள் வேண்டாம். பட்டர் பூசி மெழுக வேண்டாம். வீதிக்கு இறங்கி போராடி வருபவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எப்போது அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசைகள் முடிவு கட்டுவீர்கள் என பிரதமர் கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியும் தற்போதைய அரசாங்கமும் விலகிச் செல்ல வேண்டும். அதுபோல எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ள ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் கூறினார்.

அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கிறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருவோருக்கு தீர்வை நாம் பெற்றுக்கொடுப்போம் எனவும் தெரிவித்தார்.

## “காலி முகத்திடலில் கையை வைத்தால் களத்துக்கு நாம் செல்வோம்”

நாட்டு மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்காக வீதிக்கு இறங்கி அமைதியாகப் போராடி வருகிற நிலையில், அரச பயங்கரவாதிகளும், கொள்ளையர்களும் இதில் தலையீடுகளை மேற்கொண்டு நாட்டின் பல்வேறுப் பகுதிகளில் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்களைக் காரணங்காட்டி இளைஞர்களின் போராட்டத்துக்குப் பாதிப்புக்களையும் தாக்குதல்களையும் மேற்கொள்ள அரசாங்கம் தயாராகி வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


இது தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்ட சஜித், மக்களின் போராட்டத்தின் மீது கைவைக்க வேண்டாம். அவ்வாறு செய்தால் காலி முகத்திடலுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சென்று அவர்களைப் பாதுகாப்போம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்தன, எரிபொருள், காஸ் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்காக மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள். நாடு முன்னொருபோதும் இல்லாதவகையில் பாரதூரமான நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது எனவும் கூறினார்.

அரசாங்கம் இதுவரையில் ஜனநாயக விரோதமான முறையில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு நாட்டில் இடமளிக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கு அரசாங்கம் எந்தவிதமான தடைகளையும் ஏற்படுத்தாது எனவும் தெரிவித்தார்.

## “காலி முகத்திடலில் போராடும் இளைஞர்களின் குரலுக்கு செவிசாயுங்கள்”

காலி முகத்திடலில் போராடி வரும் இளைஞர்கள் ஒருபோதும் ஆயுதங்களைக் கையில் எடுக்கவில்லை. அரசியலமைப்பு ரீதியாகவே நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வுக்காண வேண்டும் என்றே அவர்கள் கூறுகிறார்கள். எனவே அவர்களின் குரலுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டுமென முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி தெரிவித்தார்.



நாட்டின் அரசியல் வரலாற்றில் இதுவொரு முக்கியமான நாளாக இருக்கிறது. ஆளுங்கட்சியில் இருந்த சிலர் தற்போது எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ளனர். இவர்களின் நிலைப்பாடும் எமது நிலைப்பாடும் ஒன்றாக இருக்கப்போவதில்லை. எவ்வாறாயினும் இவர்கள் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்திருப்பதால் எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதை நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் முறையாக செயற்படவில்லை என்றால் போராட்டக்காரர்கள் பாராளுமன்றத்துக்கு வருவார்கள். நாட்டின் தற்போதைய நிலையில் எதிர்க்கட்சி தங்களது பொறுப்புகளை கைவிடப்போவதில்லை எனவும் கூறினார்.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ள போதிலும் பாராளுமன்றத்துக்கு 4 அமைச்சர்கள் இல்லை. பாராளுமன்றத்தையும் எதிர்க்கட்சியையும் மதிக்கிறார்கள் என்றால் அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்கு வந்து எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. நாம் கூறிய எதனையும் அரசாங்கம் செய்யவில்லை. 19ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்த பிரதமர் என்றவகையில் கூறுகிறேன், 20ஆவது திருத்தச் சட்டத்தை விரைவாக இல்லாதொழித்துவிட்டு 19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவாருங்கள். 19ஆவது திருத்தச் சட்டத்துக்குக் கீழேயே ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. நாட்டில் காணப்படும் தற்போதைய வரிசைகள் எதுவும் முடிவுக்கு வரப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

ஒகஸ்ட் மாதம் வரையில் நாட்டுக்கு அவசியமான எரிபொருள், அத்தியாவசிய மருந்து பொருட்கள், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் நிலைமைகள் என்ன என்பதை உடனடியாக இவ்வாரத்துக்குள் பிரதமர் அறிவிக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான பல குழுக்களை உடனடியாக அமைக்க வேண்டும். பாராளுமன்றத்தின் அனுமதியில்லாத மத்திய வங்கிய நாணயத்தாள்களை அச்சிடுவதை தடை செய்ய வேண்டும். பாராளுமன்றத்தில் வரவு செலவுக் காரியாலயம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் உள்ளிட்டப் பல ஆலோசனைகளையும் ரணில் வழங்கினார்.

போராட்டங்களில் ஈடுபடும் இளைஞர்களையும் பாராளுமன்ற குழுக்களுக்கு அழைத்து அவர்களுடனும் கலந்துரையாட வேண்டும். காலி முகத்திடலில் போராடி வரும் இளைஞர்கள் ஒருபோதும் ஆயுதங்களைக் கையில் எடுக்கவில்லை. அரசியலமைப்பு ரீதியாகவே இவர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கோருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

# “உரையில் தோல்வி தெரிந்தது”

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தோல்வியடைந்த முறை என்பது ஜனாதிபதியின் உரையைப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிவதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



20ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு 19ஆவது திருத்தச் சட்டத்தை திருத்தங்களுடன் கொண்டுவருவதாக சபாநாயகர் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் உறுதியளித்துள்ளார். ஜனாதிபதியின் நேற்றைய (18) உரையைப் பார்க்கும்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தோல்வியடைந்த முறை என்பது தெளிவாகிறது. எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கான திருத்தத்தையும் கொண்டுவர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# வரவு குறைவு

சகா

நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினை காரணமாக, ஆசிரியர்கள் தொடக்கம் அரச அலுவலர்கள் வரை பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். பணியிடங்களுக்கான அவர்களின் வரவு, படிப்படியாகக் குறைந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



பாடசாலை சேவையை மேற்கொண்டுவந்த ஓட்டோ சேவைகள், பெட்ரோல் தட்டுப்பாடு காரணமாக தமது சேவையை இடைநிறுத்தியுள்ளன. ஆசிரியைகள் சேர்ந்து பாடசாலைக்கு சென்றுவந்த வான் மற்றும் ஆட்டோ சேவைகளும் ஒழுங்கில்லாமல் ஸ்தம்பிதநிலையை அடைந்துகொண்டிருக்கின்றன.

கொளுத்தும் வெயிலிலும் நடுநிசியிலும் அதிகாலையிலும் 2 அல்லது 3 மணித்தியாலங்கள் கால்கடுக்க வரிசையில் காத்துநின்று ஏமாந்த வரலாறும் உள்ளது. இதனால் அரசஅலுவலர்களும் பொதுமக்களும் பாரிய விரக்தியுடன் இருப்பதை அவதானிக்கமுடிகிறது.

திருக்கோவில், சம்மாந்துறை போன்ற சில பிரதேச செயலாளர்கள் உரிய நடவடிக்கை எடுத்து அரசாங்க ஊழியர்களுக்கென பிரத்தியேக வசதி செய்துகொடுத்திருக்கிறார்கள். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தனியானதொரு வரிசையை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர்.

ஆனால், இந்நடைமுறை எல்லா இடங்களிலும் நடைமுறையிலில்லை. திணைக்களத்தலைவர்கள் சிலர் சமகால நெருக்கடிநிலையை மறந்து, வழமைபோல் கட்டளை இட்டு சொல்லுமிடத்திற்கு வருமாறு பணிக்கப்படுவது குறித்து அலுவலர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

“எரிபொருளுக்கான எற்பாட்டைச் செய்யுங்கள். நாம் வருகிறோம்” என அவர்கள் பதிலளித்துள்ளனர். இந்தநிலை நீடித்தால் பாடசாலை தொடக்கம் அலுவலகம் வரை அரச அலுவலர்களின் வரவு மேலும் குறைவடையும் ஆபத்து எதிர்நோக்கப்படலாம்.

20 ஆயிரம் ஏக்கருக்கு மேல்

# படையினரால் ஆக்கிரமிப்பு

க. அகரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலங்களை படையினர் ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார்கள் என வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



தமிழர் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான படையினர் குவிப்பும், படையினரின் அடக்கு முறைகள், நிலப்பறிப்புகள், படையினர் தமக்கேற்ற விதத்தில் புத்தமத திணிப்புகள், வியாபார நடவடிக்கைகள் என வட பகுதியில் படையினர் சம்பந்தமான கெடுபிடிகளும் படையினரின் ஆதிக்கங்களும் ஏராளம் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை படையினர் ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார்கள்.

அளம்பிலில் தனியார் காணியை அபகரித்து தோட்டச்செய்கையும் கிறீன் ஜெக்கெட் எனும் பெயரில் செம்மலையில் சுற்றுலாவிடுதியும், புதுக்குடியிருப்பில் மரக்கறி செய்கை பண்ணை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரும், ‘கோம்பக சந்தி’ என்று கூறப்படும் வேம்படி சந்தியில் பல ஏக்கர் காணி அபகரிப்பும் தோட்டச்செய்கையுடன் பொதுவிற்பனை தளம் என பலவாறாக படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைவிட படையினருடைய அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. 2021.10.05 அன்று கொவிட்- 19 காலத்தில் இராணுவம், தொல்லியல் திணைக்களத்தினர், பௌத்த துறவிகள் ஒன்று கூடி பிரித்தோதலை இராணுவ விழாப்போல் மேற்கொண்டிருந்தார்கள்.

இதனைவிட 2022.03.19 அன்று பிரதமர் யாழ். விஜயத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பிரதமரிடம் சென்று தமது உறவுகளது நிலை பற்றி கேட்க சென்ற போது, வாகனத்தினை வழிமறித்தது மட்டுமல்லாமல் பெண்மணிகளுக்கு நடந்த அட்டூழியங்களை அனைவரும் தெரிந்ததே. தமிழ் சகோதரிகள் போராட வெளிக்கிட்டால் இப்படி தான் நடக்கும் என அன்றைய சம்பவத்திலும் படையினர் காட்டி விட்டனர்.

இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக பல்வேறு அடையாள, கவனயீர்ப்பு போராட்டங்கள் நடத்தி வருகின்றோம். அச்சுறுத்தும் விதமாக புலனாய்வாளர்களின் நடவடிக்கை , இராணுவம் குவிக்கப்படுதல், பொலிஸார் வழக்குப்பதிதல் என ஏராளம் என மேலும் தெரிவித்தார்.

# புதையல் அகழ்ந்தவர்களில் ஒருவர் தப்பினார்; 4 பேர் கைது



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள இரட்டைச்சோலைமடு பிரதேசத்தில் பண்ணையில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை திங்கட்கிழமை (18) மாலை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது 4 பேரை கைது செய்துள்ளதாகவும் ஒருவர் தப்பி ஓடிவிட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய துளையிடும் கருவி உட்பட உபகரணங்களை மீட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த அப்புகாமி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் 28,55,48, 43, வயதுடையவர்கள் எனவும் இவர்கள் மத்தியமுகாம் 11ம் கொலனி, மட்டு. புதுக்குடியிருப்பு, வவுணதீவு, போரதீவு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தப்பி ஓடிய பிரதான சூத்திரதாரி கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பூபதியின் நினைவு தினம்:

# அனுஷ்டிக்கச் சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

வா.கிருஸ்ணா



காந்திய வழியில் உண்ணாவிரதமிருந்து உயிர்த்த தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு தினம் நேற்றாகும். நினைவு தினத்தினை அனுஷ்டிக்கச் சென்றவர்கள் திருப்பியனுப்பப்பட்ட சம்பவம் நேற்று (19) மட்டக்களப்பில் நடைபெற்றது.

இந்திய இராணுவம், இலங்கையில் நிலைகொண்டிருந்தபோது, இந்திய இராணுவத்தினை வெளியேறக்கோரியும் வடக்கு, கிழக்கு இணைந்த தீர்வினை தமிழர்களுக்கு வழங்குமாறு கோரியும் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவிலுக்கு முன்பாக அன்னை பூபதி உண்ணாவிரதமிருந்தார்.

அவரது போராட்டம் கவனத்தில் கொள்ளப்படாத நிலையில், 19-04-1988 உண்ணாவிரதத்தின்போது உயிர்நீர்த்தார்.

அவரின் 34ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றைய தினமாகும். நேற்றைய தினம் மட்டக்களப்பு, நாவலடியில் உள்ள அவரின் சமாதியில் நினைவு தினத்தை அனுஸ்டிக்கச் சென்றவர்களை பொலிஸார் திருப்பியனுப்பிய சம்பவம் நேற்று நடைபெற்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன் ஆகியோர் அங்கு சென்ற வேளையில், அவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட பொலிஸார், எக்காரணம் கொண்டும் யாரும் நினைவேந்தல் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டர்கள் எனத் தெரிவித்தனர்.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனின் கைகளிலிருந்த கற்பூரத்தினையும் தட்டிவிட்ட பொலிஸார், அவர்களை அங்கிருந்து செல்லுமாறு கடும் தொனியில் அறிவுறுத்தினார்கள்.

நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் யாரும் அன்னைபூபதியின் நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தமுடியாது என தெரிவித்த பொலிஸார் மீறி செய்தால் கைதுசெய்யப்படுவீர்கள் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.




**எரிபொருளுக்காக...**
எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக, யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றில், நேற்றும் (19) மக்கள் காத்திருந்தனர்.

# அன்னை பூபதியின் 34 ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு



இந்திய அமைதிப்படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக சாத்வீகமாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு, உயிர்நீத்த அன்னை பூபதியின் 34 ஆவது நினைவு தினம் நேற்று (19) ஆகும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி வளாகத்தில் பல்கலைக்கழக மாணவர்களால் இதய பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

அன்னை பூபதியின் நினைவுருவப் படத்திற்கு மாணவர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு தொடர்ந்து பேரணியாக ஈகைச்சுடரேற்றி ஒரு நிமிடம் அகவணக்கமும் செலுத்தப்பட்டது. இவ் நினைவேந்தல் நிகழ்வில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கவனயீர்ப்பு போராட்டம்

எம்.எஸ்.எம். ஹனீபா

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுமாறும் மக்களின் இறையாண்மையை நிலை நாட்டுமாறும் கோரி, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், செவ்வாய்க்கிழமை (19) பிற்பகல் 2 மணியளவில் பல்கலைக்கழக ஒலுவில் வளாக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஒன்றிணைந்து முன்னெடுத்துள்ள இக் கவனயீர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக, ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

‘அரசே நாட்டின் இறையாண்மையை நிலைநாட்டு’, ‘விலைவாசியைக் குறை’, ‘எரிபொருளுக்கான விலையை குறை’, ‘அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கு’, ‘ஜனநாயகத்தை நிலைநாட்டு’ போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



# வித்தியாரம்பம்



வா.கிருஸ்ணா

அரச பாடசாலைகளில் 2022ஆம் ஆண்டுக்காக தரம் ஒன்றில் மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை நேற்று (19) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் நேற்று (19) காலை மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டைமுனை கனிஸ்ட வித்தியாலயத்தில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் தம்பிராசா அருமைத்துரை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலயத்தின் உதவி கல்விப்பணிப்பாளர் திருமதி உமாவதி விவேகானந்தம், ஆங்கில கல்வி இணைப்பாளரும் வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் திருமதி விக்னேஸ்வரி மகேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

நேற்றைய தினம் சுமார் 160 மாணவர்கள் முதலாம் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டு, மலர் மாலை அணிவிக்கப்பட்டு இரண்டாம் தர மாணவர்களால் வரவேற்கப்பட்டனர்.

“முஸ்லிம் எம்.பிக்கள்

# தலை குனிய செய்து விட்டனர்”

றொசேரியன் லெம்பட்




இந்த அரசாங்கத்துக்கு எதிராக பாமர, படித்த மக்கள் என்று அனைவரும் அரசாங்கமும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக கோஷமிட்டு கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் விட்ட தவறுகளை அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்த மக்களே சுட்டிக் காட்டக் கூடிய ஒரு நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் அமைச்சுப் பதவிகளை பெற்று முஸ்லிம் மக்களை தலை குனிய செய்து விட்டார்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று (19) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் இந்த அரசாங்கமும் அரசாங்கத்தைச் சார்ந்தவர்களும் செய்த அடாவடித்தனங்கள், அட்டூழியங்களுக்கு கடவுள் கொடுக்கும் சாபமாக இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது.

அதனை இன்று பெரும்பான்மை இன மக்களே மேடை போட்டு சொல்கிறார்கள்.

ஆனால், குறிப்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை எடுத்திருப்பது என்பது முஸ்லிம் சமூகத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தி இருக்கிறது. வெட்கம், ரோஷம், மானம் இருந்தால் இந்த அமைச்சுப் பதவிகளை அவர்கள் எடுத்திருக்க மாட்டார்கள் என்றார்.

# வித்தியாரம்பம்

கிளிநொச்சி வடக்கு கல்வி வலய மட்டத்திலான தரம் ஒன்று மாணவர்களை பாடசாலைகளில் வரவேற்கும் கால்கோள் விழா நேற்று (19) கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தரம் 1 வகுப்பில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதை தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் கிளிநொச்சி வடக்கு கல்வி வலய கல்வி பணிப்பாளர் க.அ. சிவனருள் ராஜா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் தரம் 1 வகுப்பிற்காக இம்முறை 434 மாணவர்கள் இணைந்துள்ளனர்.

கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரி ஆ. உதயணன் ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் பொ. விஜயநாதன் மற்றும் பாடசாலை மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.





# இ.போ.ச பஸ்களும் ஓடவில்லை

■ *ரஞ்சித் ராஜபக்ஷ*

சிபெட்கோ நிறுவனத்தால் நேற்றுமுன்தினம் (18) இரவு எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்ட நிலையில், ஹட்டனிலிருந்து தினமும் தூர மற்றும் குறுகிய சேவையில் ஈடுபடும் பஸ்கள் போக்குவரத்திலிருந்து விலகியதால், ஹட்டன் பஸ் தரிப்பிடத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

தனியார் மற்றும் இ.போ.ச பஸ்கள் இவ்வாறு போக்குவரத்து சேவைகளிலிருந்து விலகியிருந்ததால் கொழும்பு, கண்டி உள்ளிட்ட பல இடங்களுக்கு தொழில்களுக்கு செல்வோரும் ஏனைய தேவைகளுக்கு செல்வோரும் பஸ் தரிப்பிடத்தில் அதிகாலை தொடக்கம் காத்திருந்தனர்.

எனினும், எந்தவொரு பஸ்ஸூம் சேவையில் ஈடுபடாத நிலையில், ஆங்காங்கே சேவையில் ஈடுபட்ட ஒரு சில இ.போ.ச மற்றும் தனியார் பஸ்களும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களால் அச்சுறுத்தப்பட்டு, போக்குவரத்து சேவையில் ஈடுபடாத வகையில் முடக்கப்பட்டனர்.

இதன் காரணமாக தாம் போக்குவரத்திலிருந்து விலகியிருப்பதாக இ.போ.ச பஸ் சாரதிகள் தெரிவித்தனர்.

## 233 சிலிண்டர்கள் பதுக்கல் விவகாரம்

# சந்தேகநபருக்கு அபராதம்

■ *ரஞ்சித் ராஜபக்ஷ*



ஒரு தொகை சமையல் எரிவாயு சிலிண்டர்களை தமது வீட்டில் சேகரித்த குற்றத்தை ஒப்புக்கொண்ட சந்தேகநபர் ஒருவருக்கு, 10,000 ரூபாய் அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

கினிகத்தேனையைச் சேர்ந்த 50 வயதான சந்தேகநபர், நுவரெலியா நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் நேற்று (19) ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, அவரிடம் 10,000 ரூபாய் அபராத தொகையை அறவிடுமாறு நீதவான் பருக்டீன் உத்தரவிட்டுள்ளார்.

அபராத தொகைக்கு மேலதிகமாக சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 12.5 கிலோ கிராம் நிறையடைய 177 சிலிண்டர்கள், 2.4 கிலோ கிராம் நிறையுடைய 25 சிலிண்டர்கள், 5 கிலோ கிராம் நிறையுடைய 28 சிலிண்டர்கள் என்பவற்றை நிர்ணய விலையின் கீழ், நுகர்வோருக்கு விற்பனை செய்து, அந்த பணத்தை நீதிமன்றில் வைப்பிலிடுமாறும் வெற்று சிலிண்டர்களை சந்தேகநபரிடம் கையளிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நாவலப்பிட்டிய பகுதியில் உள்ள லிட்ரோ சமையல் எரிவாயு முகவர் நிலையத்தின் சாரதி என்பதுடன், பல சந்தர்ப்பங்களில் நுகர்வோருக்கு விநியோகிப்பதற்காக வழங்கப்பட்ட சிலிண்டர்களை, அதிக விலைக்கு விற்கும் நோக்கில் தமது வீட்டில் பதுக்கி வைத்திருந்த நிலையில், நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## எரிபொருள் விலையேற்றத்தின் எதிரொலி

# டயர்களை எரித்து எதிர்ப்பு

### மலையக வீதிகளில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம்

■ *மலையக நிருபர்கள்*

எரிபொருள் விலைகளின் திடீர் அதிகரிப்பு மற்றும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று (19) மலையகம் எங்கும் எதிர்ப்பு போராட்டங்கள் வலுப்பெற்றதுடன், பிரதான வீதிகளில் டயர்கள் எரிக்கப்பட்டன. இதனால் போக்குவரத்துகளும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.





**ஹட்டன், டிக்கோயா**

இதற்கமைய ஹட்டன், டிக்கோயா ஆகிய நகரங்களில் டயர்களை எரித்து வீதியை மறித்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று (19) காலை ஹட்டன், டிக்கோயா நகரப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தால் ஹட்டன்- பொகவந்தலாவ பிரதான வீதியும் ஹட்டன் -கொழும்பு, ஹட்டன்- நுவரெலியா ஆகிய வீதிகளில் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டிருந்ததோடு பல மணி நேரம் வாகன நெரிசலும் காணப்பட்டது.

அத்துடன், ஹட்டனிலிருந்து தூர மற்றும் குறுகிய இடங்களுக்கான தனியார் மற்றும் இ.போ.ச பஸ் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

**கொட்டகலை**

கேஸ் சிலிண்டரை வழங்கக் கோரி ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக




ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கேஸ் சிலிண்டர்களை வீதியில் வைத்து எரிவாயு பிரச்சினைக்கு தீர்வு கோரினர்.

இதன்போது, நுவரெலியா பகுதிக்கு கேஸ் எடுத்துச் சென்ற கேஸ் லொறியை மறித்து ஆர்ப்பாட்டகாரர்கள் கேஸ் வழங்க கோரி கோஷமிட்டதால், அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இதனையடுத்து திம்புள்ள - பத்தனை பொலிஸார் அங்கு விரைந்து கேஸ் லொறியில் இருந்த கேஸ் சிலிண்டர்களில் 60 கேஸ் சிலிண்டர்களை மாத்திரம் இறக்கி போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களுக்கு வழங்கினர்.

**யட்டியாந்தோட்டை, அவிசாவளை**

கித்துல்கல, யட்டியாந்தோட்டை, புளத்கொஹூபிட்டிய, அவிசாவளை ஆகிய பகுதிகளிலும் ஓட்டோ சாரதிகளும் தனியார் பஸ் சாரதிகளும் பொதுமக்களும் இணைந்து, பிரதான வீதியை மறித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஹட்டன்- அவிசாவளை வீதியில் போக்குவரத்து தடைப்பட்டதுடன் பொதுமக்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

**மாவனெல்ல**

மாவனெல்லையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை அடுத்து, அங்கு டயர்கள் போட்டு எரியூட்டப்பட்டன. இதனால், அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

**நாவலப்பிட்டி, கம்பளை**

நாவலப்பிட்டி, ஹப்புகஸ்தலாவ, கம்பளை, காட்டப்பிட்டி பிரதேசங்களில் நேற்று (19) கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டதுடன், வீதியின் குறுக்கே டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

அத்துடன், கம்பளை தனியார் போக்குவரத்து சபைக்கு முன்பாக பஸ் சாரதிகளும் பொது மக்களும் இணைந்து பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் கண்டி- நாவலப்பிட்டி, புசல்லாவ -நுவரெலியா பிரதான வீதிகளில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.

**இரத்தினபுரி**

நேற்றுக் காலை முதல் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டம் காரணமாக இரத்தினபுரியில் இருந்து குருவிட்ட, எஹலியகொடை, அவிசாவளை, காவத்தை, இறக்குவானை, எம்பிலிபிட்டிய, பலாங்கொடை, பாணந்துறை, ஹொரனை, இங்கிரிய, கலவான, கேகாலை ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து முற்றாகச் செயலிழந்தது.

இதேவேளை, தமிழ், சிங்கள சித்திரை புத்தாண்டுக்கு தமது சொந்த ஊர்களுக்கு வந்தவர்கள், தமது தொழிலுக்கு செல்லமுடியாது வீதிகளில் காத்து நிற்கின்ற அவலமும் காணப்படுகின்றது.

# மலையகத்தில் கிளர்ந்தெழுந்த மக்கள்

எரிபொருள் விலையேற்றம் மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக நேற்று (19) மலையகத்தின் பிரதான நகரங்கள் பலவற்றிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், இதனால் மலையக பகுதிகளின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன. (மலையக நிருபர்கள்)










## மாத்தளை பிரதேச சபை உறுப்பினர்கள்

# கறுப்பு பட்டியுடன் சபை அமர்வில்



■ *மஹேஸ் கீர்த்திரத்ன*

எரிபொருள் விலையேற்றம் உள்ளிட்ட மக்களை சிரமத்துக்குள்ளாக்கும் விடயங்களை தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருவதற்கு மாத்தளை பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (18) நடைபெற்ற மாதாந்த சபை அமர்வில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கறுப்பு பட்டியுடன் சபை அமர்வில் கலந்துகொண்டனர்.

கறுப்புப் பட்டியுடன் சபை அமர்வில் கலந்துகொள்வதானது, சபை அமர்வுகளுக்கு எதிர்ப்பை தெரிவிப்பதற்காக அல்ல என்று தெரிவித்துள்ள மாத்தளை பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவர் காமினி கொஸ்தா, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவே இந்த எதிர்ப்பு நடவடிக்கை என்றும், இதற்கு அனைவரும் கட்சி பேதம் பாராமல் ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



# வித்தியாரம்பம்...

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக நேற்று (19) தலவாக்கலை தேசிய பாடசாலையின் தரம் 1 மாணவர்கள் அதிபர் கிருஸ்ணசாமி தலைமையில் வரவேற்கப்பட்டனர். (பி. கேதீஸ்)

## உதயா எம்.பி

# அரசியல் பிழைப்பு நடத்துகிறார்

■ *நிலமேகம் பிரசாந்த்*

தன் அரசியல் ஆசைக்காகவும் பதவி மோகத்துக்காகவும் தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து, தட்டுத்தடுமாறி பாராளுமன்றம் சென்ற உதயா எனும் உதயகுமார், பாய்ந்த பாய்ச்சலை விட, இ.தொ.கா முதுகெலும்போடும் கம்பீரமாகவும் மக்களிடத்தில் வலம் வந்து கொண்டிருப்பதாக இ.தொ.காவின் உபதலைவர் சச்சுதானந்தன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் உதயகுமார் இ.தொ.காவுக்கு எதிராக வழங்கிய உரைக்கு, பதிலளிக்கும் வகையிலேயே சச்சுதானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் அரசியல் ஆசைக்காக தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து, அங்கு கையாலாகாமல் போனதால் இ.தொ.காவோடு இணைந்து, மாகாண சபைக்கு சென்று, பின்னர் மலையக உதயமென கட்சியொன்றை ஆரம்பித்து அதுவும் கைக்கொடுக்காத நிலையில், பின்னர் ஐக்கிய தேசிய கட்சிக்கு தாவி அங்கும் ஒன்றும் நடக்காத காரணத்தால், தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்துகொண்டுள்ளார்.

**உதயா எம்.பி அரசியல் பிழைப்பு தேடுகிறார்**

உதயகுமார் அரசியல் இருப்புக்காக பாய்ந்த பாய்ச்சல்களை மக்கள் நன்கு உணர்வர். மக்களின் பொருளாதார சுமையையும் இப்போதுள்ள சூழ்நிலையையும் மக்களின் உணர்வுகளையும் வைத்து அரசியல் பிழைப்பு தேடும் உதயாவை போன்றவர்களை, மக்கள் மீண்டும் துரத்தியடிக்க வேண்டும். இவ்வாறானவர்களே சமூகத்தையும் மக்களையும் அரசியலுக்காக அடமானம் வைக்கின்றவர்கள் என்றார். இ.தொ.கா முதுகெலும்புள்ள கட்சி என்பதை அன்றும் இன்றும் நிரூபித்துக் கொண்டுதான் இருக்கின்றது. அதனால் தான் அரசாங்கத்திலிருந்து



இராஜாங்க அமைச்சையும் மக்களுக்காக தூக்கியெறிந்து மக்களோடு மக்களாக போராட இ.தொ.கா பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் வெளியில் வந்தார். அதோடு நீங்கள் கொண்டுவருகின்ற நம்பிக்கையில்லா பிரேரணைக்கு இ.தொ.கா ஆதரவளிக்க வேண்டுமென கட்டாயமில்லை. அதனால் தான் நடுநிலை வகித்தோமே தவிர அமைச்சு பதவிக்காகவோ அல்லது அற்ப சலுகைக்காகவோ இ.தொ.கா இவ்வாறானதொரு முடிவை எடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

# காயப்படுத்தி கிளறிவிட்டு மனந்நொந்து கொள்வதில் பயனேது?

மூன்று வாரங்கள் வெற்றிடமாக இருந்த அமைச்சரவை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டதை அடுத்து, அமைச்சரவைக்குள் நுழைந்துவிட்டோமென சிலர் மனம்பூரித்து கொண்டாலும், புதிய அமைச்சரவை மீதான விமர்சனங்கள் மிகக்கடுமையாகவே முன்வைக்கப்படுகின்றன.

புதிய அமைச்சரவையையும் ராஜபக்ஷர்களே வழிநடத்துவார்கள் என பகிரங்கமாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்ட விமல் வீரவன்ச, சபையில் நேற்று (19) உரையாற்றும் போது பகிரங்கமாக இதைத் தெரிவித்தார்.

ராஜபக்ஷர்களுக்கு எதிரான அலையின் வேகம், நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. விலையேற்றமும் வானத்தை ஊடறுத்துச் சென்று கொண்டிருக்கிறது. நாளொன்றுக்கு கிடைக்கும் வருமானத்தை விடவும், செலவு பன்மடங்கால் அதிகரித்துவிட்டது. அத்தனைப் பொருட்களின் விலைகளும் எகிறிவிட்டன. நாடளாவிய ரீதியில், நேற்று (19) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுப்பதற்கு இதுவே பிரதான காரணமாகும்.

எமது நாட்டிலும் ஸ்திரமான அமைச்சரவை இருக்கிறதென, உலக நாடுகளுக்குப் படம்பிடித்து காட்டுவதற்கான முயற்சியாகவே, புதிய அமைச்சரவையைப் பார்க்கவேண்டும். புதுமுகங்களை உள்ளீர்த்துக்கொள்வதில் தப்பில்லை. எனினும், அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையின் கீழ் பயணிப்பதே சிறந்தது. நாடு முகங்கொடுத்து கொண்டிருக்கும் நிலையில், 'பயிற்சி அமைச்சரவை' தேவையற்றது.

அதுதான், "குதிரைகளால் கட்டி இழுக்கமுடியாத வண்டியை கழுதைகள் எவ்வாறு கட்டியிழுக்க போகின்றன" எனக் கேள்வியெழுப்பப்பட்டது. அதுகூட நியாயமானது என்பதை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளங்கிக்கொள்வதற்கு இன்னும் சில காலங்கள் எடுக்குமென்பதே உண்மை,

புதிய அமைச்சரவை நியமனத்தின் பின்னரான உரையில், இரசாயன பசளைக்கான தடை, சர்வதேச நாணய நிதியத்தை நாடாமை இவையிரண்டும் தான் செய்த தவறுகளாகுமென ஒத்துக்கொண்டார். சிலவேளைகளில் பாவமன்னிப்பு கேட்பதாகவே ஜனாதிபதியின் மன்னிப்புக்கோரல் அமைந்துள்ளது.

ஏனெனில், இரசாயன பசளையை தடை செய்யவேண்டாமென பலதரப்புகளில் இருந்தும் கோரிக்கைகள் மிக அழுத்தமாக முன்வைக்கப்பட்ட போதிலும், அதற்கு செவிசாய்க்காத ஜனாதிபதி, காயப்படுத்தி, அதைக்கிளறி, புண்ணாக்கிவிட்டு மனந்நொந்துகொண்டார்.

இந்தப் பசளைத் தடை விவகாரத்தால், நாட்டில் உணவுக்கான தட்டுப்பாடு அதிகரித்தது. இறக்குமதிக்கான வரி அதிகரிப்பால், ஆகக்கூடுதலான விலைக்கு கொள்வனவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நுகர்வோரும் பட்டினிக்குள் தள்ளிவிடப்பட்டனர்.

நாடு இப்போது இருக்கும் நிலையில், எடுக்கப்படும் தீர்மானங்களை வைத்து பார்க்குமிடத்து, கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டு மக்களிடம் கேட்டுக்கொண்ட முதலாவதும் இறுதியுமான மன்னிப்பாக இது இருக்காது. ரம்புக்கனையில், நிராயுதபாணிகளான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது, பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்துக்கும் மன்னிப்புக் கேட்டாக வேண்டும்.

சர்வதேசத்தின் கழுகுப்பார்வை நாட்டின் மீது படர்ந்திருக்கும் நிலையில், மீண்டும், மீண்டும் காயங்களை ஏற்படுத்தி, கறையைப் படியவைத்துக் கொள்வதை விடவும், தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்து முடிவுகளை எட்டுவதே யாவருக்கும் நலமாகும்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

தவறான உணர்ச்சிகளை உடன் நிறுத்திவிடுக. சில அவசரங்களால் அவமானப்பட நேரிடலாம். யோசிக்காமல் வார்த்தைகளை விடுவது, கண்டபடி வாக்குறுதி வழங்குவது போன்ற பல விடயங்களில் கட்டுப்பாடு அவசியம்.

இன்றைய இளம் தலைமுறையினர், எந்த ஒரு விடயத்தையும் ஆராயாமல் செய்துவிட விரும்புகின்றனர். காதல், திருமண விடயங்களில் கவனம் முக்கியமாகத் தேவை.

பார்த்த பார்வையில் தங்களின் காதலைத் தெரிவித்து விடுகின்றனர். வாழ்க்கை, கடையில் வாங்கும் பொருள் அல்ல!

ஆண், பெண் இருபாலாரும் தங்களை ஒரு கதாநாயகன், கதாநாயகியாக எண்ணலாம்; தவறு இல்லை. ஆனால், அவர்கள் தங்களை எப்படி செதுக்குகின்றார்கள் என்பதை உணர்ந்தே தீரவேண்டும்.

தனது நிலைக்குப் பொருத்தமானவர்களா, புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளக் கூடியவர்களா என்பதை அறிய, காலஅவகாசம் தேவைப்படுகின்றது. ஆசைப்பட்டதெல்லாமே சிறந்த தெரிவு என எண்ணுவதற்கு இவை என்ன சடப்பொருட்களா?

ஆணும் பெண்ணும் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வாழ முயல வேண்டும். காதல் வாழ்க்கை, திருமணங்கள் பூரண திருப்தியுடன் இணைதல் பெரும் பாக்கியம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சுகாதாரமற்ற முறையில் வீதி ஓரங்களில் உணவு விற்பனை

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல், வீதி ஓரங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது, நோன்பு காலம் ஆகையால் வீதி ஓரங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது. அங்கு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமல், உணவுப் பதார்த்தங்கள் தயாரிக்கப்படுவதாகவும் மக்களுக்கு தரமானதும் சுகாதாரமுமான உணவு வகைகள் கொடுக்கப்பட வேண்டும் என்ற அக்கறை எதுவும் இன்றி, பணமீட்டுவதிலேயே ஆர்வம் காண்பிப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கையுறை, உணவு கையாளும் உபகரணங்கள் போன்றவற்றை உபயோகிப்பதில்லை எனக் குற்றம்சாட்டப்படுகின்றது.

வீதி ஓரங்களில் வடிகானுக்கு போடப்பட்டுள்ள பாதுகாப்பு மூடியின் மேல் உணவுப் பண்டங்கள் வைக்கப்பட்டுள்ளதால், ஈக்கள் மொய்ப்பதோடு அப்பிரதேசத்தில் துர்நாற்றமும் வீசுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு, வீதி ஓரங்களில் விற்கப்படும் உணவுப் பொருட்கள், சுகாதார விதிமுறைகளுக்கு அமைய இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய முயலவேண்டும்; முடியாவிடின், அவற்றைத் தடை செய்ய வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.எஸ்.எம். ஹனீபா

## 'கோட்டா வெளியேறு':
# போராட்டத்தின் முடிவு என்ன?



எம்.எஸ்.எம். ஐயூப்

கடந்த மார்ச் 31ஆம் திகதி, மிரிஹானையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சொந்த இல்லத்துக்கு முன்னால் ஆரம்பித்த பொதுமக்களின் போராட்டம், இன்னமும் தொடர்கிறது.

எரிவாயு, மண்ணெண்ணெய், அத்தியவாசியப் பொருட்களின் தட்டுப்பாட்டையும் நாளொன்றுக்கு ஏழு எட்டு மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்படும் மின்வெட்டையும் எதிர்த்து, மிரிஹானையில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம், சிறிது நேரத்தில் "கோட்டா வெளியேறு" என்று கோஷமிடும் அளவுக்கு, அரசியல் போராட்டமாகிவிட்டது.

அதைத் தொடர்ந்து, ஏப்ரல் மூன்றாம் திகதி முதல், சமூக வலைத்தளங்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெற்றன. அவற்றில், ஏப்ரல் ஒன்பதாம் திகதி கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதியின் அலுவலகத்தின் முன்னால், காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் இராப்பகலாக இன்று வரை தொடர்கிறது. இப்போராட்டங்களின் போதும், "கோட்டா வெளியேறு" என்பதே பிரதான சுலோகமாக இருக்கிறது.

வடக்கில் மாதக் கணக்கில் போராட்டங்கள் இடம்பெற்ற போதிலும், தெற்கில் இது போன்றதொரு நீண்ட போராட்டம் ஒருபோதும் இடம்பெற்றதில்லை.

அரசாங்கமும் அரச ஆதரவாளர்களும், இந்தப் போராட்டத்தை முறியடிக்க இதுவரை எடுத்த சகல முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள், ஏப்ரல் மூன்றாம் திகதி போராட்டத்துக்கு மக்களுக்கு அழைப்பு விடுத்த போது, ஏப்ரல் முதலாம் திகதி முதல் நாடு முழுவதிலும் அவசரகால சட்டத்தையும் மேல்மாகாணத்தில் நான்காம் திகதி வரை ஊரடங்குச் சட்டத்தையும் அரசாங்கம் பிறப்பித்தது. ஆனால், பல பகுதிகளில் மக்கள் அச்சட்டங்களைப் பொருட்படுத்தாமல் வீதியில் இறங்கினர்.

அரசாங்கத்தை ஆதரிக்கும் கடும் இனவாதிகளான சிலரும் பௌத்த பிக்குகளும், இது பௌத்த தலைமைக்கு எதிரான போராட்டம் எனக் கூறி, போராட்டத்தை திசை திருப்ப முயன்றனர். ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் சமூக வலைத்தளங்கள் மூலமாக அவர்களுக்குப் பதிலளித்து, அந்த முயற்சியையும் முறியடித்தனர்.

அதையடுத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆர்ப்பாட்டக்காரர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். அதையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் நிராகரித்து, ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்ற தமது நிபந்தனையை மேலும் வலியுறுத்திளர். அவர்கள் அந்த அழைப்பை ஏற்றிருந்தால், யார் தம்மை பிரதிநிதித்துவப்படுத்துவது என்ற அடிப்படையில், அன்றே அவர்களிடையே பிளவு ஏற்பட்டு இருக்கும்.

பின்னர், சனிக்கிழமை 16ஆம் திகதி, ஆர்ப்பாட்டக்காரர்களை மிரட்டும் வகையில், போராட்டக் களத்துக்கு அருகே காலி முகத்திடலின் ஒரு கோடியில், பல பொலிஸ் ரக் வண்டிகளை பொலிஸார் நிறுத்தி வைத்தனர். சாத்வீகமாக நடைபெறும் ஒரு போராட்டத்தை, பலாத்காரத்தை பாவித்து அடக்கினால் ஏற்படக் கூடிய சர்வதேச நெருக்கடியைச் சுட்டிக் காட்டி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் எழுதியதை அடுத்து, அந்த வாகனங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டன.

பிரச்சினை என்னவென்றால், போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நிராகரித்தால், எவ்வாறான நிலைமை உருவாகும் என்பதும், அவை நிறைவேறினால் நாட்டில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு தீர்க்கப் போகிறார்கள் என்பதுமாகும்.

கடந்த திங்கட்கிழமை (18), ஜனாதிபதி மிகவும் மூத்த அமைச்சர்களை நீக்கிவிட்டு, புதிதாக ஓரளவு இளம் வயதினரை அமைச்சர்களாக நியமித்துள்ளார். ஓரிரு முதியவர்கள் மட்டுமே அமைச்சர்களாக உள்ளனர்.

அதேவேளை, முன்னரே சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடாதமை தவறு என்றும் இரசாயன பசளை இறக்குமதியை தடை செய்தமை தவறு என்றும் ஜனாதிபதி பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார். அதனை அவர் புதிய அமைச்சர்களை நியமித்துவிட்டு, அவர்களுக்கு ஆலோசனை வழங்கும் உரையின் போது கூறியுள்ளார். நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கும் வகையில், அரசியலமைப்பை திருத்துவதாக அன்றே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியினர் மட்டுமல்லாது துறைசார் நிபுணர்களும் எடுத்துக் கூறும் போது, இவற்றை விளங்கிக் கொள்ளாத இந்தத் தலைவர்களுக்கு, இப்போது மக்கள் கொதித்தெழுந்து போது தான் ஞானம் பிறந்துள்ளது போலும்! இவை, இவர்கள் உண்மையை உணர்ந்து கூறும் கூற்றுகள் அல்ல.

கொதித்தெழுந்துள்ள மக்களின் மனவேகத்தைக் குறைத்து, அவர்களை மீண்டும் ஏமாற்றுவதே அவர்களது நோக்கம் ஆகும். எனவே, போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இல்லை. அவ்வாறாயின் போராட்டக்காரர்கள் என்ன செய்வது?

சட்டப்படி எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மட்டுமே நாம் ஆராயலாம். சட்டத்துக்கு அப்பாற்பட்ட நிலைமைகளை எம்மால் முடிவு செய்ய முடியாது. அது சூழ்நிலைமை ஏற்படுத்தும் மாற்றமாகும். அதை முன்கூட்டியே கூறவும் முடியாது.

சட்டப்படி ஒரு ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய, இரண்டு வழிகள் தான் இருக்கின்றன. ஜனாதிபதி அவரது கடமைகளை நிறைவேற்றக்கூடிய நிலையில் இல்லை என நாடாளுமன்றத்தின் சபாநாயகரும் பிரதம நீதியரசரும் முடிவு செய்தால், பிரதமர் ஜனாதிபதியாக கடமையாற்றலாம். ஆனால், இது தற்காலிக சட்டப் பிரமாணம் என்று அரசியலமைப்பே கூறுகிறது.

குற்றப் பிரேரணையைக் கொண்டு வருவதே மற்றைய முறையாகும். ஆனால், அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டும். "கோட்டா வெளியேறு" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டாலும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினருக்கு அவ்வாறானதொரு பலமில்லை.

எவ்வாறாயினும் நாடு தழுவிய தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் மூலம் தொல்லை கொடுத்து, ஜனாதிபதி தமது பதவியைக் கைவிடச் செய்ய முடியுமாக இருந்தால், உடனடியாக பிரதமர் தான் ஜனாதிபதியாவார். ஆனால், ஒரு மாதத்துக்குள் நாடாளுமன்றத்தால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும்

1993ஆம் ஆண்டு மே தினத்தன்று ஜனாதிபதி பிரேமதாஸ, குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த போது, அப்போதைய பிரதமரான டி.பி. விஜேதுங்கவே ஜனாதிபதியானார். பின்னர் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக கலந்துரையாடும் போது, விஜேதுங்கவையே போட்டியின்றி தெரிவு செய்வதென நாடாளுமன்றத்தின் சகல கட்சிகளும் முடிவு செய்தன.

தற்போது நாடெங்கிலும் பரவி வரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியைக் கைவிட்டால், மஹிந்த உடனடியாக ஜனாதிபதியாவார். அதன் பின்னர் ஒரு மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் நடைபெறும் இரகசிய வாக்கெடுப்பொன்றின் மூலம், புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டும். அப்போதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் கட்சி ரீதியாக பிரிந்தே வாக்களிப்பர்.

குறைந்த பட்சம் மூன்று வேட்பாளர்களாவது போட்டியிடலாம். கோட்டாபய ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்தாலும் ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன விட்டுக் கொடுக்காது. அதுவும் வேட்பாளர் ஒருவரை போட்டியில் நிறுத்தும். எதிர்க்கட்சிகள் கூட்டாக போட்டியிடும் என்று நம்ப முடியாது. ஏனெனில், "திருடர்கள் வேண்டாம்" என்று கூறும் மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருக்கு வாக்களிக்காது, தமது வேட்பாளரை போட்டியில் நிறுத்தலாம்.

உண்மையிலேயே, தற்போதைய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பத்தில் விலைவாசி அதிகரிப்பு, அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு, மின்வெட்டு போன்ற உடனடி காரணங்களை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்டாலும், அவை இப்போது ஊழலுக்கு எதிரான அரசியல் போராட்டமாகவே நடைபெற்று வருகிறது.

தற்போது, தேசிய கட்சிகளில் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகாத ஒரே கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மட்டுமே! பொதுஜன பெரமுனவானது ஊழலுக்குப் பெயர் பெற்ற கட்சியாகும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது, ஐக்கிய தேசிய கட்சி பிளவுபட்டு, அதில் பெரும்பான்மையினர் அமைத்துக் கொண்ட கட்சியாகும்.

ஐ.தே.க தலைமையிலான கடந்த ஆட்சியின் காலத்திலேயே, வரலாற்றில் இடம்பெற்ற மிகப் பெரும் ஊழலான மத்திய வங்கி பிணைமுறி ஊழல் இடம்பெற்றது. அதன் ஆரம்பத்தில், தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள அனைவரும் அந்த ஊழலை மூடி மறைக்கவும் நியாயப்படுத்தவும் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பு நடைபெற்றால் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் வெற்றி பெறுவார் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

அதாவது, அந்த முறையிலும் மற்றோர் ஊழல் நிறைந்த ஆட்சியே உருவாகும். ஆர்ப்பாட்டக்காரர்களின் முயற்சியும் தியாகங்களும் வீணாகிவிடும். எனவே, இந்த ஆர்ப்பாட்டங்கள் மூலம் சர்வாதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் சட்டங்களையாவது நிறைவேற்றிக் கொள்ள முடியுமாக இருந்தால், அது நாடு அடையும் பெரும் வெற்றியாகும்.

செங்கல்பட்டு

### தமிழகத்தில் அதிகரிக்கும் கோடை வெயிலின் தாக்கம்

# வெயில், பசி மயக்கத்தில் மூவர் உயிரிழப்பு

செங்கல்பட்டு அருகே, வெயில் மற்றும் பசி மயக்கம் காரணமாக ஒரே நாளில் மூன்று பேர் இறந்தனர். செங்கல்பட்டு அடுத்த வில்லியம்பாக்கம், பாலாறு பகுதியில், நேற்று முன்தினம் (18) மாலை, ஆண் ஒருவர் இறந்து கிடப்பதாக ஆடு, மாடு மேய்ப்பவர்கள், செங்கல்பட்டு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தக்குச் சென்ற பொலிஸார், உடலை கைப்பற்றி செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். விசாரணையில், அவர் சாத்தனாஞ்சேரியை சேர்ந்த பெயின்டர் விஜயகுமார் (வயது 40) என்பதும் வ.ஊ.சி நகர், இரும்பு கடை அருகில், இரவு 7 மணிக்கு, 70 வயதுடைய அடையாளம் தெரியாத முதியவரும் அம்பேத்கர் சிலை அருகில், மாலை 4:00 மணிக்கு, அடையாளம் தெரியாத, 25 வயதுடைய வடமாநில வாலிபர், பசி மயக்கத்தில் நடந்து சென்றபோது மயங்கி கீழே விழுந்தார். அவரை பொதுமக்கள் மீட்டு, அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிறிது நேரத்தில் சிகிச்சை பலனின்றி இறந்தார். இந்த மரணங்கள் குறித்து, செங்கல்பட்டு பொலிஸார், வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கோடை வெயிலின் தாக்கம் தமிழகத்தில் இந்த ஆண்டு அதிகமாக இருப்பதால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக, தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் வெயிலால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். வழக்கமாக ஏப்ரல் இறுதிக்குள் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டு மே மாதத்தில் இருந்து விடுமுறை விடப்படும். ஆனால் கொரோனா பாதிப்பால் இந்த ஆண்டு வகுப்புகள் தாமதமாக திறக்கப்பட்டதால் தேர்வுகளும் தள்ளி வைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

மே மாதம் இரண்டாவது வாரம் பரீட்சை நடைபெறுகிறது. அதனால் பாடசாலை மாணவர்கள் கோடை வெயிலின் தாக்கத்தால் கடுமையாக பாதிக்கப்படுவதை தவிர்க்க, சனிக்கிழமை வேலைநாளை குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை பெற்றோர்களிடம் இருந்து வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை தொடக்கப்பள்ளிகளில் படிக்கும் மாணவ-மாணவிகளுக்கு மட்டும் சனிக்கிழமைகளில் விடுமுறை விடலாமா? என்பது பற்றி பள்ளிக்கல்வித்துறை பரிசீலித்து வருகிறது.

வதோதரா

# விபத்தால் உருவான கலவரம்

குஜராத்தின் வதோதரா நகரில், நேற்று முன்தினம் (18) இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டன. விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள்களில், இரண்டு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்துள்ளனர்.

இதையடுத்து, இந்த விபத்து மதக்கலவரமாக மாறியது. இரு சமூகத்தினரும் திரண்டு, கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். பொலிஸார் விரைந்து வந்து, கலவரத்தை அடக்கினர். இதுகுறித்து, பொலிஸார் கூறுகையில், “இரு பைக்குகள் மோதிக்கொண்ட சம்பவம் கலவரமாக மாறியது. இதில் காயம் அடைந்த மூவர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். கலவர வழக்கில் 19 பேரும், விபத்து வழக்கில் மூவரும் கைதாகினர்” என்றனர்.

சென்னை

# எருமை மாடும் திராவிடனா?

## சீமான் கேள்வி



கறுப்பாக இருப்பதால் திராவிடன் என்றால், எருமை மாடு கூடத்தான் கறுப்பாக இருக்கிறது. அதற்காக அதை திராவிடன் எனக் கூற முடியுமா எனக் கேள்வி எழுப்பியுள்ளார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்.

இசையமைப்பாளர் இளையராஜா புத்தகம் ஒன்றுக்கு எழுதிய அணிந்துரையில், ‘சமூக நீதி விடயத்தில், மோடி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். முத்தலாக் தடை போன்ற பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்களை கண்டு, அம்பேத்கார் பெருமிதம் கொள்வார். அம்பேத்காரும், மோடியும் இந்தியா குறித்து பெரிய கனவு கண்டவர்கள்' எனக் குறிப்பிட்டிருந்தார். இளையராஜாவின் இந்த கருத்துக்கு ஒரு தரப்பினர் வரவேற்பும், மற்றொரு தரப்பினர் எதிர்ப்பும் தெரிவித்து வந்தனர். இதனால் இந்த விவகாரம் சர்ச்சையானது. இது தொடர்பாக தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை கூறுகையில், “என்னை விட கறுப்பு தமிழன், கறுப்பு திராவிடன் யார் இருக்கிறார்? கறுப்பு தமிழன் நான்; கறுப்பு திராவிடன் நான்” எனக் கூறினார்.

இந்நிலையில், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் கூறியதாவது: “இது இளையராஜாவின் தனிப்பட்ட கருத்து. கறுப்பாக இருப்பதால் தான் திராவிடன் என அண்ணாமலை கூறுகிறார். எருமை மாடு கூடதான் கறுப்பாக இருக்கிறது. அதற்காக அதை திராவிடன் எனக் கூற முடியுமா”? இவ்வாறு அவர் கூறினார்.

லக்னோ

# “நாம் இருவர்; நமக்கு நால்வர்”



‘‘ஒவ்வோர் இந்து தம்பதியும் நான்கு பிள்ளைகள் பெற்று, இருவரை நாட்டுக்கு அர்ப்பணிக்க வேண்டும்” என, துறவி சாத்வி ரிதம்பரா தெரிவித்துள்ளார்.

உத்தர பிரதேசத்தில், நிராலா நகரில் ராம் மகோற்சவ விழாவில், சாத்வி ரிதம்பரா பேசியதாவது: நாட்டின் முன்னேற்றத்தில் பொறாமை உள்ளவர்கள் தான் புதுடெல்லியின் ஜஹாங்கிர்புரியில் நடந்த அனுமன் ஜெயந்தி ஊர்வலத்தில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்து சமூகத்தை அரசியல், பயங்கரவாதம் வாயிலாக பிளவுபடுத்த முயல்வோர் காணாமல் போய் விடுவர்.

இந்து பெண்கள், ‘நாம் இருவர்; நமக்கு இருவர்' என்ற பிரசாரத்தை கைவிட்டு, ‘நாம் இருவர்; நமக்கு நால்வர்' என்ற திட்டத்துக்கு மாற வேண்டும். நான்கு பிள்ளைகளில் இருவரை குடும்பத்துக்கும் இருவரை நாட்டுக்கும் அர்ப்பணிக்க வேண்டும். மக்கள் தொகையில் சமத்துவம் இல்லையெனில் அது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல” என்று அவர் கூறினார்.

பல்லடம்

### ஊசி வடிவிலான சொக்கலேட்

# மாணவர்களின் ஆரோக்கியத்துக்கு வேட்டு

திருப்பூர் மாவட்டம், பல்லடம் உள்ளிட்ட பகுதிகளில், பாடசாலை மாணவர்களை ஈர்க்கும் விதமாக, ஊசி வடிவிலான சொக்கலேட், கடைகளில் விற்கப்பட்டு வருகிறது. ‘சிரிஞ்ச்' போன்று உள்ள இந்த சொக்கலேட்டில், தயாரிப்பு, காலாவதி திகதி, முகவரி உள்ளிட்ட எந்த விவரங்களும் இடம் பெறவில்லை.

கவர்ச்சிகரமாக உள்ளதால், இதுபோன்ற சொக்கலேட்டுகளை வாங்கும் மாணவர்கள், இவற்றின் பக்க விளைவுகளை அறியாமல் உண்கின்றனர். மாணவர்களின் உடல் நலன் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற சொக்கலேட்கள், பெரும்பாலும் வெளி மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகின்றன. குறிப்பாக, பாடசாலைகள் அருகில் உள்ள கடைகளில், அதிகளவில் விற்கப்படுகின்றன.



உணவு பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: “ஐதராபாத்தில் இருந்து இதுபோன்ற சொக்கலேட்டுகள் தயாரிக்கப்பட்டு, தமிழகத்துக்குள் விற்பனைக்கு வருகின்றன. சிரிஞ்சுக்குள் இருப்பது சாக்லேட் தான்; இருப்பினும் இதில் சேர்க்கப்படும் கூடுதல் நிறமிகள், உடல் உபாதைகளை ஏற்படுத்தக் கூடியவையாக உள்ளன. எனவே, இது தடை செய்யப்பட்டுள்ளது. அனுமதியற்ற இதுபோன்ற சொக்கலேட்களை தயார் செய்பவர்கள், அவ்வப்போது தங்கள் பொதியின் வடிவத்தை மாற்றி, மாணவர்களைக் கவரும் வகையில் தயாரிக்கின்றனர்” என்றார்.

# ஸ்தம்பிதம்...

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாடளாவிய ரீதியில் நேற்று (19), வீதிகளை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனால், பல இடங்கள் முற்றாக முடங்கியதுடன் அன்றாட நடவடிக்கைகளும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.






















ஐ.பி.எல்:

# கொல்கத்தாவை வென்ற ராஜஸ்தான்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தாவின் அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், ஜொஸ் பட்லரின் 103 (61), அணித்தலைவர் சஞ்சு சாம்ஸனின் 38 (19), ஷிம்ரோன் ஹெட்மயரின் ஆட்டமிழக்காத 26 (13), தேவ்டுட் படிக்கல்லின் 24 (18) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், சுனில் நரைன் 4-0-21-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு, 218 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயரின் 85 (51), ஆரோன் பின்ஞ்சின் 58 (28) ஓட்டங்கள் மூலம் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தபோதும், யுஸ்வேந்திர சஹாலின் 17ஆவது ஓவரில் ஷ்ரேயாஸ் ஐயர் உள்ளடங்கலாக ஹட்-ட்ட்ரிக்குடன் 4 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்ட நிலையில், உமேஷ் யாதவ் 21 (09) ஓட்டங்களைப் பெற்றபோதும், 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்று ஏழு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சஹால் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸும், பஞ்சாப் கிங்ஸும் மோதவுள்ளன.




ஸ்பானிய லா லிகா தொடர்:

# கடிஸிடம் தோற்ற பார்சிலோனா

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற கடிஸுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்றது.

கடிஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை லூகாஸ் பெரேஸ் பெற்றிருந்தார்.

அந்தவகையில், லா லிகா புள்ளிகள் பட்டியலில் 75 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்றிட் முதலாமிடத்திலுள்ளது. ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள பார்சிலோனா, செவிய்யா, நடப்புச் சம்பியன்களான அத்லெட்டிகோ மட்றிட் ஆகியன தலா 60 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும், தமக்கிடையேயான போட்டி முடிவுகளால் இரண்டாம், மூன்றாம், நான்காமிடங்களில் காணப்படுகின்றன.



இலங்கை சதுரங்க சம்மேளனம் நடத்திய போட்டியில்

# சாய்ந்தமருது பாதிஹ் வெற்றி பெற்று சாதனை

எஸ். அஷ்ரப்கான்

இலங்கை சதுரங்க சம்மேளனம் நடத்திய போட்டியில், புரோ நைட்ஸ் செஸ் அகடமி சார்பாக பங்குபற்றி வெற்றி பெற்று தேசிய போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்று, அம்பாறை மாவட்டத்துக்கு பாதிஹ் பெருமை சேர்த்துள்ளார்.

இத்தொடர் அம்பாறை மாவட்டத்தை மையப்படுத்தி சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டிகள் 5 சுற்றுக்களைக் கொண்டதாக அமைந்திருந்ததுடன் 12 வயதுக்கு உட்பட்ட பல போட்டியாளர்கள் விளையாடினர்.

இதில் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் தரம் 2 இல் கல்விகற்கும் மாணவன் நௌஸாத் முஹம்மட் பாதிஹ் தனது வயது பிரிவில் வெற்றி பெற்று அடுத்த சுற்றான தேசிய போட்டியில் விளையாட தெரிவானார். 12 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவுக்கான போட்டியில் வெற்றிபெற்று அம்பாறை மாவட்டத்தில், சிறிய வயதை சேர்ந்த ஒரு போட்டியாளர் தேசிய போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெறும் முதல் சந்தர்ப்பம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் நாப்போலி றோமா போட்டி



இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், நாப்போலியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணிக்கும், றோமாவுக்கு மிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.


நாப்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை லொரென்ஸோ இன்சீனியா பெற்றதோடு, றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஸ்டீவன் எல் ஷராவி பெற்றிருந்தார்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஹெலாஸ் வெரோனாவுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா தோற்றது.

அந்தவகையில், சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 71 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஏ.சி மிலன் காணப்படுகின்றது. ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள இன்டர் மிலன் 69 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், 67 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நாப்போலியும், 63 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஜுவென்டஸும் காணப்படுகின்றன.

பாகிஸ்தான்

# மோடியிடம் பாக். பிரதமர் கோரிக்கை



பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ஷெபாஸ் ஷெரீப், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தக்கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

குறித்த கடிதத்தில், இந்தியாவுடன் அமைதியான அணுகுமுறையை கடைப்பிடிக்க விரும்புவதாகவும், தற்போது இருதரப்பிலுள்ள காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் சுமூகத்தீர்வு காணத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் புதிய பிரதமராகப் பதவி யேற்ற ஷெபாஸுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்திருந்த நிலையில், இப்பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா


# திரைப்படம் பார்ப்பதில் உலக சாதனை




அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை சேர்ந்த ரமிரோ அலனிஸ் என்ற இளைஞர் 'ஸ்பைடர் மேன்- நோ வே ஹோம்' படத்தைப் பார்ப்பதில் புதுவித கின்னஸ் சாதனையைப் படைத்துள்ளார்.

இவர், 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி குறித்த திரைப்படத்தை முதன் முறையாகப் பார்த்ததாகவும் அன்றிலிருந்து 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை சுமார் 292 முறை அப் படத்தை பார்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்காக அவர் 720 மணி நேரத்தை செலவிட்டுள்ளார் எனவும் இது புதுவித கின்னஸ் சாதனை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிறிஸ்டியானோ றொனால்டோவின் மகன் மரணம்

## சோகத்தில் ரசிகர்கள்

மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கும் அவரது மனைவிக்கும் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஆண் குழந்தையொன்று இறந்து விட்டதாக றொனால்டோ தெரிவித்துள்ளர்.

றொனால்டோவுக்கு கிறிஸ்டியானோ ஜூனியர், மேடியோ என்ற 2 மகன்களும் ஈவா, அலனா என்ற 2 மகள்களும் உள்ளனர். இந்நிலையில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் "எனது மனைவி மீண்டும் கருத்தரித்துள்ளார்" என றொனால்டோ தெரிவித்திருந்தார். அத்துடன், தாம் இரட்டைக் குழந்தைகளை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அவர்களுக்கு அண்மையில் இரட்டைக்குழந்தைகள் பிறந்த நிலையில், அதில் ஆண் குழந்தை இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து றொனால்டோ நேற்று முன்தினம் (18) வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'எங்கள் ஆண் குழந்தை இறந்துவிட்டதை ஆழ்ந்த சோகத்துடன் தெரிவிக்கிறேன். எந்தவொரு பெற்றோரும் உணரக்கூடிய மிகப்பெரிய வலி இது. பெண் குழந்தை பிறந்தது மட்டுமே இந்த தருணத்தில் ஓரளவு நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வலிமை அளிக்கிறது. வைத்தியர்கள், தாதியர்களின் கவனிப்பு மற்றும் ஆதரவிற்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

இந்த இழப்பில் நாங்கள் அனைவரும் பேரழிவிற்கு ஆளாகியுள்ளோம்.

இந்தக் கடினமான நேரத்தில் தனிமையை கேட்டுக்கொள்கிறோம். எங்கள் மகனே! நீ எங்கள் தேவதை. நாங்கள் எப்போதும் உங்களை நேசிப்போம்' இவ்வாறு பதிவிட்டுள்ளார்.



சவுதி அரேபியா

# வீட்டுச் சிறையில் ஏமனின் முன்னாள் ஜனாதிபதி

ஏமனின் முன்னாள் ஜனாதிபதி அதமன்சூர் ஹாதி, சவுதி அரேபியாவில் வீட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏமனில் அந்த நாட்டு அரச படைகளுக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 7 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நீடித்து வருகின்றது.

இப்போரில் ஏமன் அரசுக்கு ஆதரவாக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள், ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தரை வழியாகவும் வான்வழியாகவும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில், உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவர சவுதி அரேபியா முயற்சிகளை மேற்கொண்டு வரும் சூழலில், கடந்த 7ஆம் திகதி ஏமனின் ஜனாதிபதி மன்சூர் ஹாதி தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அத்துடன், எட்டு அரசியல் தலைவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட புதிய ஜனாதிபதி கவுன்சிலுக்கு தனது அதிகாரத்தையும் அவர் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சவுதி அரேபியா அரசு கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவே மன்சூர் ஹாதி தனது பதவியை இராஜினாமா செய்ததாகவும் தற்போது அவர் சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் வீட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

குறிப்பாக, மன்சூர் ஹாதியின் ஊழல் நடவடிக்கைகளுக்கான ஆதாரங்களை, சவுதி அரேபியா அதிகாரிகள் வெளியிடுவதாக மிரட்டியே அவரைப் பதவி விலக வைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.



உக்ரேன்

# போரில் இணைந்த சுற்றுலாப் பிரயாணி

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் தீவிரமாகப் போர் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் கனடாவைச் சேர்ந்த இகோர் வோல்ஷானின் என்ற நபர், தனது விடுமுறையைக் கழிப்பதற்காக உக்ரேனுக்குச் சென்றிருந்த நிலையில், போர் காரணமாக மீண்டும் கனடாவுக்குச் செல்ல முடியாமல் தவித்துள்ளார்.

அதேசமயம் உலகெங்கிலும் உள்ள மக்களை ரஷ்யாவை எதிர்த்துப் போராட உதவுமாறு, உக்ரேன் ஜனாதிபதி செலென்ஸ்கியும் அழைப்பு விடுத்திருந்தார். குறித்த அழைப்பினை ஏற்ற இகோர் வோல்ஷான், வெளிநாட்டு படைகளுக்கான பிரிவில் இணைந்து கொண்டார். இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், "எனக்கு எப்போது வேண்டுமானாலும் மரணம் ஏற்படலாம். மரணம் உறுதி என்பதை புரிந்துகொண்டு களத்தில் இறங்க வேண்டும்" எனவும் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 20 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.